மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

1. திரு. இரா. மோகன்,
2. திரு. கே. ரமணி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேரவைக்கு (Sen te) உறுப்பினர்கள் தேர்வு :

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. பெரியண்ணன்.
2. திரு. அன்பில் பொய்யாமொழி.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.